(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No. CC. 68 of 2022 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| | | Prosecution/Complainant side **P.W.1** |
| Deposition of witness for | | Defence |
| | | Court |

Name : பாப்பா

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of September 2022.

16.09.2022

**சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).**

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். இவ்வழங்கின் எதிரியை தெரியும். நான் எனதுஅப்பா இடத்தை ராஜன் என்பவருக்கு ஒத்தி வைத்திருந்தேன். ஒத்திப் பணம்

ரூ.6000/-த்தை கட்டிவிட்டேன். இடத்தில் பருத்திமார் அப்படியே இருந்தது அதை நான் எடுத்துவிட்டு எனக்கு இடத்தை சுத்தப்படுத்தி தாருங்கள் என்று கூறினேன். அதற்கு ராஜன் எந்த பதிலும் கூறவில்லை.

**2.** 09ம் தேதி மாதம் நினைவில் இல்லை 2021ம் வருடம் காலை 07.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரி மீனாள் நான் ராஜனிடம் பேசிக்கொண்டிருக்கும்போது எப்படி தேவிடியா நீ இடத்தை கேப்பாய் கொடுக்க முடியாது என்று கூறினார். கருவைமரத்தை வெட்டும் இரும்பு கம்பியை வைத்து எனது வலது பக்கதலையிலும், நெற்றியிலும் அடித்துவிட்டார். எனது அம்மா அரசி சண்டையை விலக்க வந்தார் எனது அம்மாவையும் மண்டையில் அடித்து விட்டார். எனது அம்மா ஒரு மாதத்திற்கு முன்பாக உடல்நிலை சரியல்லாமல் இறந்துவிட்டார்.

**3.** பின்பு கீழத்தூவல் காவல்நிலையத்திற்கு சென்றேன். அங்கிருந்த சார்பு ஆய்வாளர் ஏம்மா இரத்தத்துடன் வந்தால் எப்படி கேஸ் எடுக்க முடியும் மருத்துவமனைக்கு போய் சிகிச்சை எடும்மா என்று கூறினார். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு போகச்சொன்னார். நானும், எனது அம்மாவும் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்தோம்.

**4.** சிகிச்சையில் இருந்தபோது முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு போலிசார் வந்து விசாரித்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் அதில் படித்து காட்டிய பின்பு தான் கையொப்பம் செய்தேன். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை__

1. எனக்கு எழுத படிக்கத் தெரியாது, கையொப்பம் செய்வேன். சம்பவம் நடந்த உடனே நான் காவல்நிலையத்திற்கு தான் சென்றேன். காவல்நிலையம் சென்று நடந்த சம்பவங்களை கூறினேன் என்று சொன்னால் சரிதான். போலிசார் மற்றும் சார்பு ஆய்வாளர் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

2. காவல்நிலையத்தில் எவ்வளவு நேரம் நின்று கொண்டிருந்தீர்கள் என்றால் 05 நிமிடம் இருக்கும். சம்பவ இடத்திலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினீர்கள் என்றால் காலை 08.00 மணி இருக்கும். எனக்கு ஏற்பட்ட காயத்தால் மயக்கம் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். அதனால் நான் பேசமுடியாத நிலையில் இருந்தேன் என்றால் சரிதான்.

3. சம்பவம் நடக்கும்போது வேறுயாரும் இருந்தார்களா என்றால் எனது அப்பா, அம்மா மற்றும் முனியாண்டி இருந்தார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்தால் எத்தனை நாள் மயக்கமாக இருந்தேன் என்றால் 3 நாட்களுக்கு மேலாக நான் மயக்கமாகத் தான் இருந்தேன். (நீதிமன்றம் சாட்சியிடம் 3 நாட்களாக மயக்கமாக இருந்தேன் என்றும் என்று கூறியதால் மயக்கம் எப்படி இருந்தது என்று கேட்டபோது தலையை தூக்க முடியாமல், எதிரே உள்ள ஆள் தெரியாமலும் மயங்கி இருந்தேன், நான் நிதானமாகவும் இல்லை என்று கூறினார்). எனக்கு முன்னே உள்ள ஆட்கள் என்ன பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை என்று சொன்னால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்பட்ட புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று போலிசாருக்குத் தான் தெரியும் என்று சொன்னால் சரிதான், போலிசார் என்னிடம் படித்துக் காட்டினார். போலிசார் எழுதி என்னிடம் படித்துக் காட்டினார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதி

படித்துக்காட்டிய புகாரில் கையொப்பம் செய்தேன். போலிசார் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை. எதிரிக்கும் எனக்கும் உள்ள இடப்பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து அந்த புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.